# INSTITUTE OF PHYSICS, SRI LANKA

Vidya Mandiraya, 120/10, Wijerama Mawatha, Colombo 7, Sri Lanka.
(*Incorporated by an Act of Parliament, Act No. 12 of 1986*)
*Email: ipsl@kln.ac.lk    Web: http://www.ip-sl.org and http://www.ipsl.lk*


## பௌதீகவியல் கருத்துக்களின் மூலம் கணணி உருவகப்படுத்தலுக்கான தேசிய போட்டி

### போட்டி அமைப்பாளர்

இந்த போட்டி இலங்கை பௌதீகவியல் நிறுவனம் (IPSL), கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### போட்டியின் குறிக்கோள் மற்றும் நோக்கம்

- போட்டியின் நோக்கம் மாணவர்களிடையே பௌதீக கருத்தமைவுபுரிதலை வலுப்படுத்துவதுடன் தகவல் தொழில்நுட்பதிறனை அவர்களின் நாளாந்த கற்றல் நடவடிக்கைகளில் பயன்படுத்துதலை ஊக்குவித்தலும் ஆகும்.
- போட்டியின் குறிக்கோள் உருவாக்கப்படும் உருவகப்படுத்தல்களை பௌதீகவியல் கற்கைகளுக்கான வள உபகரணங்களாக பயன்படுத்தும் வகையில் அபிவிருத்தி செய்தல்.

### தகைமை

- இடைநிலைப் பாடசாலை மாணவர்கள் (அரச மற்றும் தனியார்) மேற்படி போட்டியில் கலந்து கொள்ள தகைமையுடையவர்கள் ஆவர்.

### மொழி மூலம்

- உருவகப்படுத்தல்கள் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் மூலம் அமையலாம். ஆயினும் இருமொழி மற்றும் மும்மொழி மூலமான விண்ணப்பங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

### பரிசுகள்

முதல் மூன்று சிறந்த சமர்ப்பிப்புக்களுக்கு பின்வருமாறு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படுவதுடன் ஏனைய சிறந்த 10 சமர்ப்பிப்புக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- முதல் பரிசு - ரூபா 25,000 பணமும் ஒரு விருதும்
- இரண்டாம் பரிசு - ரூபா 15,000 பணமும் ஒரு விருதும்
- மூன்றாம் பரிசு - ரூபா 10,000 பணமும் ஒரு விருதும்

### போட்டிக்கான சமர்ப்பிப்புக்களை சமர்ப்பிக்கும் படிமுறைகள்

- தகுதியான மாணவர்கள் தனியாளாகவோ அல்லது குழுவாகவோ (மூன்றுக்கு மேற்படாத) போட்டியில் கலந்து கொள்ள முடியும்.
- ஒரு போட்டியாளர் ஆகக்கூடியது மூன்று உருவகப்படுத்தல்களை சமர்ப்பிக்க முடியும்.
- போட்டியாளர்கள் பிரபலமான மென்பொருள்களான ஜாவா, ஃபிளாஷ், டிறக்டர், போன்றவற்றை பயன்படுத்த முடியும்.
- உருவகப்படுத்தல்கள் கணணியில் மேலதிக மென்பொருள்கள் எதுவும் நிறுவாமல் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதுடன் இணைய இணைப்பு இல்லாத நிலையிலும் செயல்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- உருவகப்படுத்தல்கள் வலைப்பக்கமாக தேவையான தேவைப்பாடுகள் (தேவைப்படின்) மற்றும் எழுத்துருக்களுடன் பல்லூடகத் தட்டில் பதிவு செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- உருவகப்படுத்தல் யாவற்றுடனும் உருவகப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட சமன்பாடுகள் மற்றும் கோட்பாடுகள் உள்ளடங்கிய விரிவான கோப்பு ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.


| President | Joint Secretaries | | Treasurer |
|---|---|---|---|
| Professor S.R.D. Kalingamudali<br>Department of Physics<br>University of Kelaniya<br>Kelaniya 11600<br>Mobile: +94-71-2510646<br>Facsimile: +94-11-2911485<br>*email: kalinga@kln.ac.lk* | Dr (Mrs) W.J.M. Samaranayaka<br>Department of Physics<br>University of Kelaniya<br>Kelaniya 11600<br>Office: +94-11-2903351<br>Mobile:+94-71-6371973<br>*email: janaki@kln.ac.lk* | Dr N.G.S. Shantha<br>Department of Physics<br>University of Sri Jayewardenepura<br>Nugegoda 10250<br>Office: +94-11-2758383<br>Mobile: +94-71-5309672<br>*email: sng@sjp.ac.lk* | Dr H.H. Sumathipala<br>Department of Physics<br>University of Kelaniya<br>Kelaniya 11600<br>Office: +94-11-2903349<br>Mobile: +94-71-8487622<br>*email: sumathi@kln.ac.lk* |

# INSTITUTE OF PHYSICS, SRI LANKA

Vidya Mandiraya, 120/10, Wijerama Mawatha, Colombo 7, Sri Lanka.
(*Incorporated by an Act of Parliament, Act No. 12 of 1986*)
*Email: ipsl@kln.ac.lk    Web: http://www.ip-sl.org and http://www.ipsl.lk*

### இறுதித்திகதி

- விண்ணப்பங்கள் கோரப்படல் - 01 மார்ச் 2013
- விண்ணப்பங்கள சமர்ப்பித்தல் - 30 மார்ச் 2013
- உருவகப்படுத்தல்கள் சமர்ப்பிப்பு – 15 ஜூலை 2013
- சமர்ப்பிப்புக்களை ஒழுங்குபடுத்தல் - (இரண்டு வாரங்கள்) ஜூலை 2013
- உண்மைத்தன்மைகள் பற்றிய ஆய்வு – (இரண்டு வாரங்கள்) ஜூலை 2013
- வெற்றியாளர்களை தெரிவு செய்தல் - (இரண்டு வாரங்கள்) ஜூலை 2013
- விருது வழங்கல் ஆகஸ்ட் 2013

### மதிப்பாய்வு

- வெற்றியாளர்கள் இலங்கை பௌதீகவியல் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட நடுவர் குழாமினால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- அனைத்து சமர்ப்பிப்புக்களும் இலங்கை பௌதீகவியல் நிறுவனத்தால் நியமிக்கப்படும் இரண்டு நடுவர் குழாம் மூலம் ஆய்வு செய்யப்படும். பௌதீகவியலாளர்களை கொண்டமைந்த முதலாவது குழாம்உருவகப்படுத்தல்களின் துல்லியம், உண்மைத்தன்மை மற்றும் கட்டமைப்பு அடிப்படையில் 15 உருவகப்படுத்தல்களை தேர்ந்தெடுக்கும்.
- மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 15 உருவகப்படுத்தல்களின் விண்ணப்பதாரிகள் பௌதீகவியலாளர்கள் மற்றும் கணணி வல்லுனர்களைக் கொண்ட இரண்டாவது குழாம் முன்னிலையில் தங்கள் உருவகப்படுத்தலை வெளிப்படுத்துமாறு வேண்டப்படுவர். இக்குழாம் சமர்ப்பிக்கப்பட்ட உருவகப்படுத்தல்களின் உண்மைத்தன்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப தகைமை போன்றவற்றை ஆய்வு செய்யும்.
- இரண்டாவது குழாமின் சிபார்சின் அடிப்படையில் முதலாவது குழு வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்கும்.

### பதிப்புரிமை

- போட்டியாளர்கள் தாம் சமர்ப்பிக்கும் உருவகப்படுத்தல்களுக்கு பதிப்புரிமை உடையவர்கள்.
- போட்டியின் அமைப்பாளர்களாகிய இலங்கை பௌதீகவியல் நிறுவனம் இறுதி வெற்றியாளர்களின் படைப்புக்களை மீள உருவாக்கி இலவசமாக விநியோகிக்க உரிமையுடையவர்கள்.

### ஏனையவவை

- போட்டியாளர்கள் ஏற்பாட்டாளர்களின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.
- வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்பு ஏற்கனவே வேறொருவரால் உருவாக்கப்பட்டது என தெரிய வந்தால் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டதனை நிறுத்திவைக்க இலங்கை பௌதீகவியல் நிறுவனத்திற்கு உரிமையுண்டு.
- போட்டி நடுவர்களின் முடிவே இறுதியானது. மேன்முறையீடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- மேற்படி விதிமுறைகளில் மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள இலங்கை பௌதீகவியல் நிறுவனத்திற்கு பூரண உரிமை உண்டு.

### பிரதான அனுசரணையாளர்

- வரையறுக்கப்பட்ட மோட்டரோலா சொலூசன் லங்கா (தனியார்) நிறுவனம்
214, நாவல வீதி, ராஜஹிரிய

### ஊடக அனுசரணை

- உபாலி செய்தித்தாள

### மேலதிக விபரங்களிற்கு

- கலாநிதி எச்.எச்.சுமதிபால, பௌதீகவியல் துறை, களனிப்பல்கலைக்கழகம், களனி 11600
மின்னஞ்சல் sumathi@kln.ac.lk இணையம் http://www.ip-sl.org மற்றும் http://www.ipsl.lk

| President | Joint Secretaries | | Treasurer |
|---|---|---|---|
| Professor S.R.D. Kalingamudali | Dr (Mrs) W.J.M. Samaranayaka | Dr N.G.S. Shantha | Dr H.H. Sumathipala |
| Department of Physics | Department of Physics | Department of Physics | Department of Physics |
| University of Kelaniya | University of Kelaniya | University of Sri Jayewardenepura | University of Kelaniya |
| Kelaniya 11600 | Kelaniya 11600 | Nugegoda 10250 | Kelaniya 11600 |
| Mobile: +94-71-2510646 | Office: +94-11-2903351 | Office: +94-11-2758383 | Office: +94-11-2903349 |
| Facsimile: +94-11-2911485 | Mobile:+94-71-6371973 | Mobile: +94-71-5309672 | Mobile: +94-71-8487622 |
| *email: kalinga@kln.ac.lk* | *email: janaki@kln.ac.lk* | *email: sng@sjp.ac.lk* | *email: sumathi@kln.ac.lk* |